# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2196/28 - 2020 ඔක්තෝබර් මස 06 වැනි අඟහරුවාදා - 2020.10.06

*2196/28 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்களினால் செய்யப்படும் பிரகடனம்**

(முத்திரை)

**கோட்டாபய ராஜபக்ஷ**

சனாதிபதியின் பணிப்புரை

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 33 ஆம் உறுப்புரையினால் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக அபிவிருத்தி முன்னுரிமைகள், சுயதொழில்கள் மற்றும் பாரம்பரிய தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சிறு பொருளாதார வாழ்வாதாரத் தேவைகளுக்காக புவியியல் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் மற்றும் வழிமுறைகளைப் பரிசீலனை செய்வதற்கான சனாதிபதி செயலணியொன்றைத் தாபித்தல்.

1. திரு. ஜே. ஜே. ரத்னசிறி
   செயலாளர், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
2. திரு. அனில் ஜாசிங்ஹ
   செயலாளர், சுற்றாடல் அமைச்சு
3. திரு. ஆர். டப்ளிவ். ஆர்.பேமசிறி
   செயலாளர், நெடுஞ்சாலைகள் அமைச்சு


1A - G 32740 — 385 (2020/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. திரு. அனுர திசாநாயக்க
செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு
5. திரு. ஆர். ஏ. ஏ. கே. ரணவக்க
செயலாளர், காணி அமைச்சு
6. திரு. எம். கே. பீ. ஹரிஸ்சந்திர
செயலாளர், வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு
7. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) டப்ளிவ்.பி.பி.பெர்ணாந்து
செயலாளர், வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
8. திரு. எஸ். டி. ஏ. பீ.பொரலெஸ்ஸ
செயலாளர், காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
9. திரு. டப்ளிவ்.எம்.எம்.பீ.வீரசேகர
பணிப்பாளர் நாயகம், கமநல சேவைகள் திணைக்களம்
10. திருமதி ஆர். எம். சி. எம். ஹேரத்
காணி ஆணையாளர்
11. திரு. எஸ். ஏ. அனுர சத்துருசிங்க
வனப் பாதுகாப்பு நாயகம்
12. திருமதி ஏ. எஸ். இளம்கம்கே
பணிப்பாளர் நாயகம், காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
13. திரு. பி.பீ. ஹேமந்த ஜெயசிங்க
பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை
14. பிரதிப் பொலிஸ்மா அதிபர், சுற்றாடல் பிரிவு
15. திரு. அனுர வல்பொல
தலைவர், புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம்
16. திரு. ஹர்ஷான் டி சில்வா
தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை
17. திருமதி மலர்மதி கங்காதரன்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
18. திரு. டபிள்யூ. எம். கே. பி. எஸ். ஆர். பெர்ணாந்து
பதில் பணிப்பாளர் நாயகம், தேசியப் பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள் !

அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் வாழ்வாதாரத் தேவைகளுக்காகப் புவியியல் வளங்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளமையினாலும், இனங்காணப்பட்டுள்ள அவ்வாறான வளங்களை தோண்டும்போதும், போக்குவரத்துச் செய்யும்போதும் தற்போதுள்ள செயல்முறைகளினுள் சிரமங்களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளதாலும், அப்பொருட்களின் தேவைப்பாட்டில் குறைபாடுகள் ஏற்படுவதனால் கட்டுமான மற்றும் சேவை வழங்குதல் செலவுகள் அதிகரித்துள்ளமையினாலும், இந்த நிலைமை காரணமாக நாட்டின் அபிவிருத்திச் செயற்பாடுகளை நிலையாகக் கொண்டுசெல்வதில் கடினங்கள் ஏற்பட்டுள்ளமையாலும், சுற்றாடல் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிப்பதாகவும், பல்வேறு துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதாகவும், எனது கவனம் செலுத்தப்பட்டிருப்பதால், அவ்வாறான நிலைமைகளை எதிர்கொண்டு இலங்கையின் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் கட்டுமான துறைகளின் அபிவிருத்தி பின்னோக்கிச் செல்லாமல் தொடர்ச்சியாக முன்னோக்கிக் கொண்டுசெல்லும் முறைமைகளை இனங்காணும் தேவையினை கவனத்தில்கொண்டு,

1. திரு. ஜே. ஜே. ரத்னசிறி
செயலாளர், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

2. திரு. அனில் ஜாசிங்ஹ
செயலாளர், சுற்றாடல் அமைச்சு
3. திரு. ஆர். டப்ளிவ். ஆர்.பேமசிறி
செயலாளர், நெடுஞ்சாலைகள் அமைச்சு
4. திரு. அனுர திசாநாயக்க
செயலாளர், நீர்ப்பாசன அமைச்சு
5. திரு. ஆர். ஏ. ஏ. கே. ரணவக்க
செயலாளர், காணி அமைச்சு
6. திரு. எம். கே. பீ. ஹரிஸ்சந்திர
செயலாளர், வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு
7. மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) டப்ளிவ்.பி.பி.பெர்ணாந்து
செயலாளர், வனசீவராசிகள் பாதுகாப்பு, யானை வேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
8. திரு. எஸ். டி. ஏ. பீ.பொரலெஸ்ஸ
செயலாளர், காணி முகாமைத்துவ அலுவல்கள், அரச வியாபார காணிகள் மற்றும் சொத்துக்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு
9. திரு. டப்ளிவ்.எம்.எம்.பீ.வீரசேகர
பணிப்பாளர் நாயகம், கமநல சேவைகள் திணைக்களம்
10. திருமதி ஆர். எம். சி. எம். ஹேரத்
காணி ஆணையாளர்
11. திரு. எஸ். ஏ. அனுர சத்துருசிங்க
வனப் பாதுகாப்பு நாயகம்
12. திருமதி ஏ. எஸ். இளம்கம்கே
பணிப்பாளர் நாயகம், காணி பயன்பாட்டு கொள்கைத் திட்டமிடல் திணைக்களம்
13. திரு. பி.பீ. ஹேமந்த ஜெயசிங்க
பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை
14. பிரதிப் பொலிஸ்மா அதிபர், சுற்றாடல் பிரிவு
15. திரு. அனுர வல்பொல
தலைவர், புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம்
16. திரு. ஹர்ஷான் டி சில்வா
தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபை
17. திருமதி மலர்மதி கங்காதரன்
மேலதிகப் பணிப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களம்
18. திரு. டபிள்யூ. எம். கே. பி. எஸ். ஆர். பெர்ணாந்து
பதில் பணிப்பாளர் நாயகம், தேசிய பௌதிகத் திட்டமிடல் திணைக்களம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆகிய நான், தங்களின் விவேகம், திறமை, நேர்மை மற்றும் இந்தப் பணியின் கூட்டுப் பொறுப்பின் தேசியத் திட்டங்களை வகுக்கும் பொறுப்பினைக் கொண்டவர்கள் என்ற வகையில் மிகுந்த நம்பிக்கையையும் பற்றுறுதியையும்கொண்டு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தங்களை தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள், சுயதொழில்கள் மற்றும் பாரம்பரிய தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள சிறு பொருளாதார வாழ்வாதாரத் தேவைகளுக்காகப் புவியியல் வளங்களைப் பயன்படுத்துதல் மற்றும் அவற்றைப் பெற்றுக்கொள்ளும் மூலங்கள் மற்றும் வழிமுறைகளைப் பரிசீலனை செய்வதற்கான சனாதிபதி செயலணியின் உறுப்பினர்களாக கீழ்வரும் செயல்திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக இத்தால் நியமிக்கின்றேன்.

1. பாறை, மணல் மற்றும் மண் போன்ற புவியியல் வளங்களைப் பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்துவதற்கான மேம்பாட்டு முன்னுரிமைகளை அடையாளம் கண்டு, இந்த நோக்கத்திற்காக ஆண்டுதோறும் தேவையான பொருள் வழங்கல் அளவுகளை மதிப்பிடுதல்.

*2. அந்த அபிவிருத்தி முன்னுரிமைகளுக்குத் தேவையான மேற்கூறிய மூலப்பொருட்களைப் பெறக்கூடிய நாடு முழுவதிலும் உள்ள பகுதிகளிலும் இடங்களிலும் சுற்றாடல் பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்தல் மற்றும் ஒதுக்குதல்.*

*3. அந்த இடங்களில் அகழ்வாராய்ச்சிக்கான விஞ்ஞான, எளிய முறைகளை அடையாளம் கண்டு, மூலப்பொருட்களை முன்அனுமதிகளுடன் வழங்கும் முறைகளை ஆராய்தல்.*

*4. கல், மணல் மற்றும் மண் போன்ற புவியியல் வளங்கள் உள்ள பகுதிகளில் பரம்பரையாக வாழும் மக்களின் மற்றும் அந்த வளங்களைப் பயன்படுத்தும் கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் கட்டுமானத் துறைகளைச் சார்ந்தவர்களின் கருத்துக்களையும் பரிந்துரைகளையும் பெறுதல்.*

*5. அபிவிருத்தித் திட்டங்கள், சுயதொழில் மற்றும் பாரம்பரிய தொழில்கள் மற்றும் சிறு பொருளாதார வாழ்வாதார தேவைகளுக்கான அடிப்படை கட்டுமானப் பொருட்களுக்குத் தேவையான கல், மணல் மற்றும் மண் போன்ற கனிய வளங்களைப் பெற்றுக்கொள்ளல், அகழ்வாராய்ச்சி செய்தல் மற்றும் கொண்டு செல்வதற்கான தற்போதுள்ள சட்டவிதிகளை மீளாய்வு செய்து, அதற்குச் செலவாகும் கட்டணங்கள் மற்றும் அரச வரிகளை ஒருங்கிணைத்து, எளிய மற்றும் திறமையான முறைகளை அறிமுகப்படுத்திச் செயல்படுத்தவும்.*

*6. மேற்கூறிய நோக்கங்களுக்காக தற்போதைய உரிம முறையை மீளாய்வுக்குட்படுத்தி, காலாவதியான சட்ட விதிமுறைகள், நிறுவன மற்றும் நிர்வாகக் கட்டமைப்பை மறுபரிசீலனை செய்து, இற்றைப்படுத்துவதற்குத் தேவையான புதுப்பிப்புகள் மற்றும் தற்போது செயற்படுத்தப்படும் சிக்கலான நிர்வாக நடைமுறைகள் மற்றும் சுற்றறிக்கைகள் ஆகியவற்றை உரியமுறையில் இற்றைப்படுத்துவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தல்.*

*7. அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகளுக்குத் தேவையான அனுமதிகளைப் பெறுவதில் தேவையற்ற தாமதங்களைத் தவிர்ப்பதற்காக ஒரே நிறுவனக் கட்டமைப்பின் மூலம் அனைத்து அனுமதிகளையும் பெறுவதற்கு வசதியாக ஒரு அமைப்பை அறிமுகப்படுத்துதல்.*

*தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற வகையில் முன்னுரிமையாகக் கருதப்படும் பல்வேறு பயிர்ச் செய்கைகள் வணிக ரீதியாகப் பயிரிடக்கூடிய விவசாய நிலங்கள், இறால் உள்ளிட்ட நன்னீர்மீன் பண்ணைகள், கால்நடை வளர்ப்பு மற்றும் கோழிப்பண்ணைகள், தொழில்துறை மற்றும் முதலீட்டு வலயங்கள், கொள்கலன் நிலையங்கள் மற்றும் சேமிப்பு வளாகங்கள், மணல் மண், கல் போன்ற நில வள அகழ்வாராய்ச்சி இடங்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத் திட்டங்கள், தகவல் தொழில்நுட்ப வலயங்கள், சுற்றுலா வலயங்கள் மற்றும் மையங்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் நகர்ப்புற வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் பூங்காக்கள், காடுகள் மற்றும் இயற்கை அழகான இடங்கள் போன்றவற்றை பிரதேச ரீதியாக இனங்கண்டு பிரதேச செயலாளர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களுடன் சுற்றாடல் மதிப்பீடுகள் மற்றும் ஒப்புதல்கள், அரச மதிப்பீட்டின் பெறுமதி, உட்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களின் தேவைக்குரிய கருத்திட்டங்களைச் செயல்படுத்தக்கூடிய பகுதிகளை அடையாளம் காணல் மற்றும் அவ்விடங்களை முன் ஒப்புதலுடன் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்குச் சிபார்சு செய்தல்.*

*மேலும், அரசசேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு.ஜே.ஜே.ரத்னசிறி அவர்களை மேற்கூறிய செயலணியின் தலைவராக நியமிக்கிறேன்.*

*மேலும் இச்செயலணியின் செயலாளராக சனாதிபதியின் சிரேட்ட உதவிச் செயலாளர் திரு. கே.ஆர்.கங்காதர அவர்களை நியமிக்கிறேன்.*

*மேலும், இத்தால் கையளிக்கப்படும் பணிகளை நிறைவேற்றுவதற்கு உரியதாகத் தேவைப்படக்கூடிய விடயங்களைத் தேடிப்பார்ப்பதற்கு மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்கு மேற்போந்த செயலணிக்கு இத்தால் நான் அதிகாரமளிக்கின்றேன்.*

*மேலும், சொல்லப்பட்ட செயலணியின் உறுப்பினர்களாகிய உங்களுக்கு காலத்துக்குக்காலம் எனக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இத்தால் அதிகாரமளிக்கின்றேன்.*

*மேலும், இந்தப் பணிகளில் முன்னுரிமை வழங்கக்கூடிய இடங்கள் மற்றும் முறைமைகள் குறித்து 45 நாட்களுக்குள் எனக்கு அறிக்கையிடுதல்.*

*மேலும், இச்செயலணிக்கு ஆலோசனைகள் வழங்கக்கூடிய அல்லது சேவைகளை வழங்குவதற்காக ஒத்துழைப்பினைக் கோரக்கூடிய சகல அரச உத்தியோகத்தர்கள் மற்றும் அத்தகைய ஏனைய நபர்களினால் அப்பணி தொடர்பாக உரியவாறு*

பின்பற்றக்கூடிய அத்தகைய ஆலோசனைகளுக்கமையச் செயற்படவேண்டுமெனவும் வழங்கக் கூடிய சகல உதவிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமெனவும் சகல தகவல்களையும் வழங்கவேண்டுமெனவும் நான் இத்தால் சகல உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய நபர்களுக்கும் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

மேலும், யாதேனும் அரச ஊழியர் அல்லது யாதேனும் அமைச்சின், அரச திணைக்களமொன்றின், அரச கூட்டுத்தாபனமொன்றின் அல்லது ஏனைய அவ்வாறான நிறுவனமொன்றின் உத்தியோகத்தர் மேற்குறிப்பிட்ட செயலணியினால் ஒப்படைக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றத் தாமதிக்கும் அல்லது தவறும் சந்தர்ப்பங்கள் எல்லாவற்றையும் என்னிடம் அறிக்கையிடுமாறு மேற்குறிப்பிட்ட செயலணிக்கு நான் இத்தால் கட்டளையிட்டுப் பணிப்புரை விடுக்கின்றேன்.

இரண்டாயிரத்து இருபதாம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதியாகிய இன்று இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பகிரங்க இலச்சினையின் கீழ் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**பீ. பி. ஜயசுந்தர,**
சனாதிபதியின் செயலாளர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.